செ.வெ.எண்: 50 **செய்தி வெளியீடு** நாள்: 13.01.2010

# பொங்கல் திருநாளை முன்னிட்டு தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகப் பணியாளர்களுக்கு 107 இலட்சம் ரூபாய் ஊக்கத் தொகை

## முதலமைச்சர் கலைஞர் அவர்கள் ஆணை

தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகத்தில் பணியாற்றும் சி மற்றும் டி பிரிவு பணியாளர்களுக்கு கடந்த மூன்று ஆண்டுகளாக பொங்கல் திருநாளையொட்டி கழக அரசினால் செயலாக்க ஊக்கத் தொகை வழங்கப்பட்டுள்ளது.

அதனைத் தொடர்ந்து, தைத் திங்கள் முதல் நாள் தமிழ்ப் புத்தாண்டு மற்றும் பொங்கல் திருநாள் கொண்டாடப்படுவதால், தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகத்தில் பணியாற்றும் சி மற்றும் டி பிரிவு பணியாளர்கள், தொகுப்பூதியம் பெறுவோர், நேரடி நெல் கொள்முதல் நிலையப் பணியாளர்கள், சுமை தூக்குவோர், தற்செயல் பணியாளர்கள் ஆகிய நிலைகளில் பணிபுரியும் 30 ஆயிரத்து 611 பணியாளர்களுக்கு சென்ற ஆண்டு வழங்கியதைப் போலவே இந்த ஆண்டும், 2008-2009ஆம் ஆண்டிற்கான செயலாக்க ஊக்கத் தொகையாக தலா ரூ.350 வீதம் மொத்தம் ஒரு கோடியே 7 இலட்சத்து 13 ஆயிரத்து 850 ரூபாய் வழங்கிட முதலமைச்சர் கலைஞர் அவர்கள் ஆணையிட்டுள்ளார்கள் என்று மாண்புமிகு உணவுத் துறை அமைச்சர் அவர்கள் தெரிவித்துள்ளார்கள்.

உணவுத் துறை அமைச்சரின்
சிறப்பு நேர்முக உதவியாளர்
தலைமைச் செயலகம், சென்னை-600 009